பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

14 12 2024 7 15
சனிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மக்களவையில் அரசியல் சாசனம் தொடர்பான சிறப்பு விவாதத்திற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று பதிலளிக்கிறார்.

2. கனடாவில் இந்திய மாணவர்களின் பாதுகாப்புக்கு மத்திய அரசு முன்னுரிமை அளிப்பதாக வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது.

3. மஹாராஷ்டிர மாநில அமைச்சரவை இன்று விரிவாக்கம் செய்யப்படுகிறது.

4. தென்கொரிய அதிபர் மீது அந்நாட்டு நாடாளுமன்றத்தில் இன்று பதவிநீக்கத் தீர்மானம் கொண்டுவரப்படுகிறது.

5. இந்தியாவுக்கு எதிரான 3வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் ஆஸ்திரேலியா முதல் இன்னிங்சில் சற்றுமுன் வரை விக்கெட் இழப்பின்றி 19 ரன் எடுத்துள்ளது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

மக்களவையில் அரசியல் சாசனம் தொடர்பான சிறப்பு விவாதத்திற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று பதிலளிக்கிறார்.

அரசியலமைப்பு சட்டத்தை நாடு ஏற்றுக்கொண்டு 75 ஆண்டுகள் நிறைவடைந்ததை குறிக்கும் வகையில் இரண்டு நாள் விவாதம் நேற்று மக்களவையில் தொடங்கியது.

விவாதத்தை தொடங்கி வைத்துப் பேசிய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் கலாச்சாரத்தின் அனைத்து அம்சங்களையும் அரசியல் அமைப்புச் சட்டம் உள்ளடக்கியுள்ளதாக கூறினார்.

இந்தியா வலுவான நாடாக உருவாக இந்திய அரசியல் அமைப்பு சட்டம் வழிவகுத்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

75 ஆண்டுகளுக்கு முன்பு புதிய இந்தியாவுக்கான அரசியல் அமைப்பை உருவாக்கும் செயல்முறையை அரசியலமைப்பு சபை நிறைவு செய்ததாகவும் அவர் தெரிவித்தார்.

அரசியல் நிர்ணய சபையால் உருவாக்கப்பட்ட அரசமைப்பு சட்டம் வெறும் ஆவணம் அல்ல என்றும், அது இந்திய மக்களின் விருப்பத்தின் வெளிப்பாடு என்றும் அவர் கூறினார்.

கடந்த சில ஆண்டுகளாக அரசியலமைப்பு சட்டத்தை ஒரு குறிப்பிட்ட கட்சியின் பங்களிப்பாக சித்தரிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் குறை கூறினார்.

<<<<>>>>

மாநில தலைமைச் செயலர்கள் பங்கேற்கும் தேசிய அளவிலான மாநாட்டை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று புதுதில்லியில் தொடங்கி வைக்கிறார்.

வளர்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகளை விரைவுபடுத்தும் வகையிலும், மத்திய – மாநில அரசுகளுக்கிடையே ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் வகையிலும் இந்த மாநாட்டுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

2022ஆம் ஆண்டு இமாச்சலப்பிரதேச மாநிலம் தரம்சாலாவில் முதல் மாநாடு நடைபெற்றது.

கடந்த ஆண்டு ஜனவரி மாதம் புதுதில்லியில் இரண்டாவது மாநாடு நடைபெற்றது.

இன்று நடைபெற உள்ள மாநாட்டில் மாநிலங்கள் மற்றும் யூனியன்பிரதேசங்களின் தலைமைச் செயலாளர்கள், பல்வேறு துறைகளின் நிபுணர்கள் கலந்துகொள்ள இருப்பதாக எமது செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

தொழில்முனைவோரை ஊக்குவித்தல், வேலைவாய்ப்பு, திறன்மேம்பாடு, மாநிலங்கள் மற்றும் யூனியன்பிரதேசங்களில் கடைபிடிக்கப்படும் சிறந்த நடைமுறைகளை மற்ற மாநிலங்களில் அறிமுகப்படுத்துதல் ஆகியவை தொடர்பாக இந்த மாநாட்டில் விவாதிக்கப்பட உள்ளது.

உற்பத்தி, சேவை, பண்ணைசாரா கிராமப்புற பணிகள், நகர்ப்புற மேம்பாடு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உள்ளிட்டவை தொடர்பாகவும் தீவிரமாக இந்த மாநாட்டில் விவாதம் நடைபெற உள்ளதாக எமது செய்தியாளர் மேலும் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் புதுதில்லியில் நேற்று போர்ச்சுகல் வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு. **Paulo Rangel**-ஐ சந்தித்துப் பேசினார்.

இருதரப்பு ஒத்துழைப்புகள், தூய்மையான எரிசக்தி, தொழில்நுட்பம், டிஜிட்டல், மின்சார வாகனம், கடல்சார் பாதுகாப்பு ஆகிய துறைகளில் புதிய வாய்ப்புகளை கண்டறிவது தொடர்பாக இருவரும் விவாதித்ததாக சமூக வலைதளத்தில் திரு. ஜெய்சங்கர் குறிப்பிட்டுள்ளார்.

மேற்காசியாவில் நிலவும் பதற்றம் மற்றும் யுக்ரைன் - ரஷ்யா மோதல், இந்தோ – பசிபிக் பகுதியில் தற்போதுள்ள நிலை குறித்தும் போர்ச்சுகல் அமைச்சருடன் விவாதித்ததாகவும் திரு. ஜெய்சங்கர் மேலும் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

சிரியாவில் இருந்து நாடு திரும்ப விருப்பம் தெரிவித்த 77 இந்தியர்கள் வெளியேற்றப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால், லெபனான் வழியாக இவர்கள் இந்தியாவுக்கு அழைத்துவரப்பட்டுள்ளதாக கூறினார்.

இந்த 77 பேரும் லெபனான் மற்றும் சிரியாவில் உள்ள தூதரகங்களோடு நெருக்கமான தொடர்பைக் கொண்டிருந்தவர்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

வெளியுறவுத்துறை செயலர் திரு. விக்ரம் மிஸ்ரியின் பங்களாதேஷ் பயணம் குறித்து செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த திரு. ஜெய்ஸ்வால், பங்களாதேஷில் ஜனநாயகத்துடன் நிலையான, அமைதியான, முற்போக்கான அனைத்துத் தரப்பு மக்களையும் உள்ளடக்கிய அரசு உருவாவதை இந்தியா ஆதரிப்பதாக கூறினார்.

பங்களாதேஷில் உள்ள சிறுபான்மை மக்களின் நலன்கள் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும் என்று இந்திய அரசின் விருப்பத்தை அந்நாட்டு அரசிடம் திரு. மிஸ்ரி வலியுறுத்தியதாகவும் அவர் கூறினார்.

கனடாவில் இந்திய மாணவர்கள் 3 பேர் உயிரிழந்தது தொடர்பாக கருத்து தெரிவித்த வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர், இது தொடர்பாக இந்தியா தனது ஆழ்ந்த கவலையையும், எதிர்ப்பையும் கனடா நிர்வாகத்திடம் தெரிவித்துள்ளது என்று கூறினார்.

கனடாவில் கல்வி பயிலும் இந்திய மாணவர்களின் பாதுகாப்புக்கும், அங்குள்ள இந்தியர்களின் பாதுகாப்புக்கும் மத்திய அரசு மிகுந்த முன்னுரிமை அளிப்பதாகவும் இது தொடர்பாக கனடா அரசுடன் அந்நாட்டில் உள்ள இந்திய தூதர் தொடர்ந்து வலியுறுத்தி வருவதாகவும் திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால் கூறினார்.

<<<<>>>>

இந்திய அஞ்சல் மற்றும் தொலைத்தொடர்பு, கணக்கு மற்றும் நிதி சேவை அமைப்பின் 50வது நிறுவன நாளை முன்னிட்டு புதுதில்லியில் இன்று சிறப்பு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில் குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தங்கர், வடகிழக்கு மாநில மேம்பாட்டுக்கான அமைச்சர் திரு. ஜோதிர் ஆதித்ய சிந்தியா ஆகியோர் கலந்துகொள்கிறார்கள்.

<<<<>>>>

மஹாராஷ்டிர மாநில அமைச்சரவை இன்று விரிவாக்கம் செய்யப்படுகிறது.

இதில் பிஜேபி, சிவசேனா, தேசியவாத காங்கிரஸ் கட்சிகளின் சார்பில் அமைச்சர்கள் பதவியேற்க உள்ளனர்.

இந்நிலையில் நேற்று மும்பையில் செய்தியாளர்களிடம் பேசிய மாநில முதலமைச்சர் திரு. தேவேந்திர ஃபட்னவிஸ், இலாக்காக்கள் ஒதுக்கீடு தொடர்பாக பிஜேபி மூத்த தலைவர்களுடன் கலந்தாலோசித்து முடிவு செய்யப்படும் என்று கூறினார்.

கூட்டணிக் கட்சிகளைப் பொறுத்தவரை யாருக்கு அமைச்சர் பதவி வழங்குவது என்பதை அக்கட்சிளே முடிவெடுக்கும் என்றும் அவர் கூறினார்.

சமீபத்தில் நடைபெற்ற மகாராஷ்டிர மாநில சட்டப்பேரவை தேர்தலில் வெற்றி பெற்ற பிஜேபி, சிவசேனா மற்றும் தேசியவாத காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் ஆதரவோடு கூட்டணி அரசு அமைத்தது.

<<<<>>>>

தென்கொரிய அதிபர் திரு. **Yoon Suk Yeol** மீது அந்நாட்டு நாடாளுமன்றத்தில் இன்று பதவிநீக்கத் தீர்மானம் கொண்டுவரப்படுகிறது.

தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெற்று வாக்கெடுப்பு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்கொரியாவில் அதிபரை நீக்க தேசிய நாடாளுமன்றத்தில் உள்ள 300 உறுப்பினர்களில் 200 உறுப்பினர்களின் ஆதரவு தேவை.

இந்த தீர்மானத்திற்கு ஆளும் கட்சி உறுப்பினர்களும், எதிர்க்கட்சி உறுப்பினர்களும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

தென்கொரியாவில் அரசியல் ஸ்திரமற்ற நிலை நீடித்ததால் சமீபத்தில் அவசர நிலையை அதிபர் பிறப்பித்தார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து நாடு முழுவதும் எதிர்க்கட்சிகள் போராட்டம் நடத்தி வருகின்றன.

<<<<>>>>

தேசிய நெடுஞ்சாலைகளில் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக அதிநவீன ரோந்து வாகனங்களை அறிமுகப்படுத்த இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் திட்டமிட்டுள்ளது.

சாலைகளை திறமையாக கண்காணிக்கவும், விபத்துகள் ஏற்படும்போது விரைந்து சென்று மீட்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் இத்தகைய ரோந்து வாகனங்கள் உதவும் என்று அந்த ஆணையம் கூறியுள்ளது.

நவீன ரோந்து வாகனங்களில் செயற்கை நுண்ணறிவுடன் இணைக்கப்பட்ட கேமராக்கள் பொருத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெடுஞ்சாலைகளில் தடையின்றி வாகனங்கள் செல்வதை உறுதிப்படுத்தவும், சாலைகளைப் பயன்படுத்துவோருக்கு புதிய அனுபவத்தை வழங்கவும் இது பயன்படும் என்றும் அந்த ஆணையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

29வது சர்வதேச திரைப்பட விழா கேரள தலைநகர் திருவனந்தபுரத்தில் இன்று தொடங்குகிறது.

இந்த விழாவை அம்மாநில முதலமைச்சர் திரு. பினராயி விஜயன் தொடங்கி வைக்கிறார்.

இந்திய திரைப்படத்துறையில் 50 ஆண்டுகளை நிறைவு செய்த பிரபல திரைப்பட கலைஞர் திருமதி ஷபான ஆஸ்மி துவக்க விழாவில் கௌரவிக்கப்படுகிறார்.

இம்மாதம் 20ஆம் தேதி வரை நடைபெற உள்ள திரைப்பட விழாவில் 68 நாடுகளைச் சேர்ந்த 177 திரைப்படங்கள், 15 திரையரங்குகளில் திரையிடப்பட உள்ளன.

<<<<>>>>

சுவை மிகுந்த நீலகிரி ஸ்ட்ராபெரி பழத்தின் நாற்றுகளை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு குறைந்த விலையில் வழங்க தோட்டக்கலைத்துறை முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பாக இத்தாலியைச் சேர்ந்த நிறுவனம் ஒன்றுடன் தோட்டக்கலைத்துறை ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

இந்தியாவுக்கு எதிரான 3வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் ஆஸ்திரேலியா முதல் இன்னிங்சில் சற்றுமுன் வரை விக்கெட் இழப்பின்றி 28 ரன் எடுத்துள்ளது.

பிரிஸ்பேனில் இன்று காலை தொடங்கிய இப்போட்டியில் டாஸ் வென்ற இந்தியா முதலில் பந்துவீச தீர்மானித்து.

<<<<>>>>

ஆசிய மகளிர் இளையோர் ஹாக்கி கோப்பைக்கான அரை இறுதியில் இந்தியா இன்று ஜப்பானை எதிர்கொள்கிறது.

**<<<<The End>>>>**